**மனேஜ்மென்ட் சேர்விஸஸ் றக்ஷன (பிறைவேட்) லிமிட்டட் - 2022**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மனேஜ்மென்ட் சேர்விஸஸ் றக்ஷன (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கடன்கள் மற்றும் அதன் வசூல் என்பன கம்பனியின் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக அந்த மீதிகள் தாய் நிறுவனத்தின் (ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்ரேசன்) ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. 31 திசம்பர் 2022 இல் மொத்த ஊழியர் கடன் மீதி தொகையானது ரூபா. 155,295,603. | ஏற்கனவே கடன் பதிவேட்டை பராமரிக்க ஆரம்பித்துள்ளது. | ஊழியர் கடனும் ஊழியர் நலனின் ஒரு பகுதியாகவே உள்ளது. ஆகவே முகாமைத்துவமானது கம்பனியின் ஏடுகளில் ஊழியர் கடன்களை பதிவு செய்வதற்கு தேவையான படிமுறைகளை மேற்க்கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்குரிய ஆவணச்சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

| விடயம் | தொகை ரூபா. | கிடைப்பனவற்ற ஆவணச்சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (a.) மருத்துவ விடுமுறை படி | 23,572,912 | ஆவணப்படுத்தப்பட்ட கொடுப்பனவுக் கொள்கை மற்றும் இயக்குனர் சபை அங்கிகாரம் | கம்பனியின் கடந்த கால நடைமுறையின் படி பிணி விடுமுறை கொடுப்பனவு செய்யப்பட்டது. | கம்பனியானது ஊழிய நலன் திட்டங்களை செயல்முறைப்படுத்த முறையான கொள்கையை உருவாக்கி சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் முன் ஒப்புதலை பெற வேண்டும். |
| (b.) வாகனக் கடன் | 75,802,708 | சபை அங்கீகரித்த கொள்கை | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | |
| (c.) இடர்கடன் | 79,492,895 | சபை அங்கீகரித்த கொள்கை | | |
| (d.) இலாப வெகுமதிக் கொடுப்பனவு | 39,377,303 | சபைப் பத்திரம் | | |
| (e.) பரிசுக் கைச்சாத்துக் கொடுப்பனவு | 1,305,000 | சபை அங்கிகாரம் மற்றும் சபைப் பத்திரம் | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் கொடுக்கவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்தம்) சட்ட இல.04 இன் படி, 01 ஜனவரி 2020 முதல் பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) மீளப் பெறப்பட்டது. எவ்வாறாயினும், 31 டிசம்பர் 2022 இல் பெற வேண்டிய ESC ரூபா. 4,346,862 மற்றும் கொடுக்க வேண்டிய ESC ரூபா.1,940,901 தொகைகளானது தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான எந்த நடவடிக்கைகளும் எடுக்காமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உண்மையான நாட்குறிப்பு பதிவுகள் மறுபக்கம் திருப்பப்பட்டது மற்றும் நாட்குறிப்பு பதிவுகளை நுழைப்பதற்கு முன் அங்கிகாரம் பெறப்படும். | முகாமைத்துவமானது நிலுவையில் உள்ள மீதிகளை வரி அதிகாரிகளுடன் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (a.) | 1935 தொழிற்சங்க ஆணை (சட்டம்) இன் கட்டுரை 8(1), 8(2) மற்றும் வர்த்தகமானி இல.8160/25-10-1935. | நிறைவேற்றுத்தர சம்பளத்திற்கான 01 டிசம்பர் 2019 முதல் 31 அக்டோபர் 2022 வரையிலான காலக்கட்டத்திற்கான கூட்டு ஒப்பந்தத்தின் கட்சிகளான ஆறு (06) தொழிற்சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளதா மற்றும் செல்லுபடியானதா என்பதை நிருபிக்கக்கூடிய ஆவணச்சான்று கணக்காய்வுக்கு கிடைப்பனவு அற்றதாக இருந்தது. | பதில் அளிக்க பொறுப்பான அதிகாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. | கூட்டு ஒப்பந்தத்தில் பங்கு பெறுவதற்கு முன் எல்லா தொழிற்சங்கங்களும் செயல்பாட்டில் உள்ளதா மற்றும் செல்லுபடியானகும் தொழிற்சங்கங்களா என்பதை முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். |
| (b.) | பெருநிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறை குறியீடு 2017 | பிரிவு B.3 இன் படி, கம்பனியின் வருடாந்த அறிக்கையில் ஊதியக் கொள்கைக்கூற்று இருக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி மற்றும் தாய் நிறுவனத்தின் ஊதியக் கொள்கையானது தாய் நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தால் கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | வருடாந்த அறிக்கையில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியால் ஏற்படுத்தப்படுகின்ற செலவினமானது ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்ரேசன் மூலமே திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. எனவே இலாபம் அல்லது நட்டம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்கு அமைப்பு அகவிதியின் படி கம்பனி நிறுவப்பட்டிருந்திருந்தது.

- காப்புறுதி முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப சேவைகளை வழங்குவதற்கு
- காப்புறுதி ஆலோசனை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு
- காப்புறுதி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு
- பொது முகாமைத்துவம மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| | தொகை | | வேறுபாடு | | அதிகரிப்பு/(குறைவு) | |
|---|---|---|---|---|---|---|
| **உருப்படி** | **2022** | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| | **ரூபா. 000** | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா.000 | % | % |
| முகாமைத்துவ கட்டணம் | 783,149 | 739,905 | 43,244 | 38,983 | 5.8% | 5.6% |
| சம்பளங்கள் | 329,201 | 304,247 | 24,954 | 11,157 | 8.2% | 3.8% |
| மொத்த பணியாளர் செலவு | 756,065 | 729,351 | 26,714 | 35,600 | 3.7% | 5.1% |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 91 | 85 | 06 | 05 | 7.1% | 6.25% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| **விகிதம்** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|
| ஒரு ஊழியருக்கு ஒரு மாதத்திற்கான செலவு (ரூபா.) | 692,619 | 715,148 | 722,658 | 683,284 |
| ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்ரேசன் லிமிட்டட்டின் (SLIC) மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்திலிருந்து மொத்த ஊழியர் செலவு வீதம் | 1.83% | 1.69% | 1.76% | 1.70% |
| ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்ரேசன் லிமிட்டட்டின் (SLIC) ஆண்டிற்கான தேறிய இலாபத்திலிருந்து மொத்த ஊழியர் செலவு வீதம் | 7.17% | 7.26% | 11.98% | 8.17% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இலக்குகளின் அடைவ

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியின் அமைப்பு அகவிதியின் படி, தாய் நிறுவனத்திற்கு காப்புறுதி முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப சேவைகளை வழங்குதல், காப்புறுதி ஆலோசனை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல், காப்புறுதி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்குதல் மற்றும் பொது முகாமைத்துவம மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் ஆகியவை கம்பனியின் நோக்கங்களாகும். எவ்வாறாயினும், அந்த நோக்கங்களை அடைய கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | MSRPL ஐ மறுகட்டமைக்க முகாமைத்துவம் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது மற்றும் இதன்படி புதிய கட்டமைப்பின் கீழ் இந்த இலக்குகள் கலந்துரையாடப்படும். | முகாமைத்துவமானது கம்பனியின் இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிட்டட்டின் முக்கிய முகாமைத்துவ பதவியை (KMPs) ஆட்சேர்ப்பு செய்து இரண்டாம் நிலைப்படுத்துவது கம்பனியின் நோக்கங்களில் ஒன்றாகும். எவ்வாறாயினும் கம்பனி மூலம் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய KMPs களை கம்பனி இனங்கண்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் நிறுவன விளக்கப்படம் கணக்காய்விற்கு சமர்ப்பபிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவன விளக்கப்படம் உள்ளது. மற்றும் அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | கம்பனி மூலம் இரண்டாம் நிலைக்குத் தேவைப்படும் முக்கிய முகாமைத்துவ பதவிகளை (KMPs) கம்பனி இனங்காண வேண்டும். |
| (b.) | ஊதியப் பட்டியலின் படி, 31 டிசம்பர் 2022 இல் கம்பனியில் 91 அதிகாரிகள் காணப்பட்டு தாய் நிறுவனத்திற்கு இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டனர். எவ்வாறாயினும், அந்த அதிகாரிகளின் பணி விவரங்கள் தொடர்பான தகவல்கள் பெறப்படவில்லை. | மனித வள திணைக்களம் உறுதிப்படுத்தியிருப்பது என்னவென்றால், அவர்கள் அனைத்து ஊழியர்களுக்கும் பணி விபரங்களை வழங்கியுள்ளனர் மற்றும் தனிப்பட்ட கோப்புக்களுக்கான நகல்களை வழங்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | கம்பனியானது ஒவ்வொரு பணியாளரின் வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் அடையாளம் கண்டு அனைத்து அதிகாரிகளுக்கும் பணி விபரங்களை வழங்க வேண்டும். |
| (c.) | 2022 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் ஆட்சேர்ப்புக் குழு கம்பனியில் இருக்கவில்லை. ஊதியப் பட்டியலின் படி, மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் இரண்டு (02) முகாமைத்துவப் பதவிகள் ஓய்வு பெற்றன/ ராஜினாமா செய்திருந்தன. மேலும், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் ஆறு (06) நபர்கள் கம்பனிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு தாய் நிறுவனத்திற்கு இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டனர். | SLIC மூலோபாயத் திட்டம் மற்றும் வணிகத் தேவைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுகின்றன. | கம்பனிக்கு முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் இருக்க வேண்டும். |
| (d.) | 01 டிசம்பர் 2019 முதல் 31 அக்டோபர் 2022 வரையிலான காலப்பகுதியில் கையெழுத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் காலாவதியானது. இருப்பினும், கம்பனி 15 மார்ச் 2023 வரை கூட புதிய கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. மேலும், கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க கம்பனி காலாவதியான கூட்டு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தியிருந்தது. | முகாமைத்துவத்தால் கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை முறைப்படுத்த முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கை முடிவானதும் நாங்கள் வழங்குவோம். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும். |